கொழும்புப் பல்கலைக்கழகம் இலங்கை

கலைப்பீடம்

கலைமாணி / கல்விமாணி இரண்டாம் வருடப் பரீட்சை (பொருளியல்) - 2017/2018

இரண்டாம் அரையாண்டுப் பருவ இறுதிப்பரீட்சை

ECN 2226 – இடைநிலைப் பேரினப் பொருளியல்

(அனுமதிக்கப்பட்ட காலம்: இரண்டு மணித்தியாலங்கள்)

எவையேனும் நான்கு (4) வினாக்களுக்கு மட்டும் விடைதருக

---

(1). (அ). அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களை முதனிலைக் குறிக்கோள்கள் மற்றும் இரண்டாம் நிலைக்குறிக்கோள்கள் என இருவகைப்படுத்தலாம். இவ்வாறு வகைப்படுத்துவதன் நோக்கங்கள் எவை? விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ). "அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பிரதான பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்களை எய்துவதில் பணக்கொள்கையைவிட இறைக்கொள்கையே வெளிப்படையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது". இக்கூற்றை நுணுக்கமாக ஆராய்க.

(13 புள்ளிகள்)

(2). (அ). நுகர்வுச் சார்பொன்றின் பொதுவடிவம் $C(Y)= a_0 + b_0Y$ எனத்தரப்படுகிறது. இங்கு C நுகர்வுச் செலவீடு மற்றும் Y தேசிய வருமானம் ஆகும்.

(i) இச்சமன்பாட்டில் '$a_0$' வின் பெறுமதி வெளிக்காரணிகளில் தங்கியுள்ளது. விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) வருமானத்தில் (Y) ஏற்படும் அதிகரிப்பு வீதத்தின் சமஅளவினால் (C) நுகர்வுமட்டம் அதிகரிக்காது. மக்களின் உளவியல்சார் நடத்தையே இதற்குக் காரணமாகும். விளக்குக.

(04 புள்ளிகள்)

(iii) MPC +MPS = 1 என்பதன் பொருளியல் கருத்தினை விளக்குக .

(05 புள்ளிகள்)

(ஆ) Y=(a+I)*1/(1-mpc). என்னும் சூத்திரத்தைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையில் மொத்த வெளியீட்டு மட்டங்களைக் கணிப்பிடுக.

| *தன்னிச்சையான செலவீடுகள்* | *எல்லை நுகர்வு நாட்டம்* | *முதலீடு* | *மொத்த வெளியீடு* |
|---|---|---|---|
| 200 | 0.5 | 500 | |
| 300 | 0.5 | 300 | |
| 400 | 0.4 | 500 | |
| 500 | 0.5 | 500 | |
| 500 | 0.6 | 600 | |

(05 புள்ளிகள்)

(இ) பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி நுகர்வு மற்றும் சேமிப்புச்சார்புகளைப் பெறுக.

| *தேசிய வருமானம் (மில்லியன் ரூபா)* | *நுகர்வுச் செலவீடு (மில்லியன் ரூபா)* |
|---|---|
| 300 | 240 |
| 500 | 400 |

(06 புள்ளிகள்)

(3). பின்வரும் பெறுமதிகள் கருதுகோள் ரீதியான மூடப்பட்ட பொருளாதாரமொன்றிற்குரியதாகக் கருதுக. (C, I, G, TR என்பன பில்லியன் ரூபாவில் அளவிடப்பட்டுள்ளன)

C=300 MPC = 0.7 t = 0.2
G = 400 I= 200 TR=50

(அ). இப்பொருளாதாரத்தின் நுகர்வுச்சார்பினைப் பெறுக.

(02 புள்ளிகள்)

(ஆ). இப்பொருளாதாரத்தின் சமநிலை வருமான மட்டம் யாது?

(06 புள்ளிகள்)

(இ). இப்பொருளாதாரத்தின் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது?

(03 புள்ளிகள்)

(ஈ). சமநிலை வருமான மட்டத்தின் போது நுகர்வு மற்றும் சேமிப்பு மட்டங்கள் யாவை?

(03 புள்ளிகள்)

(உ). குறைந்த மட்ட வருமானம் பெறுவோருக்கான நேரடி மாற்றல் கொடுப்பனவாக (TR) 1000 மில்லியன் ரூபாவைச் செலவிட அரசாங்கம் தீர்மானிப்பதாகக் கருதுக. புதிய சமநிலை வருமான மட்டத்தைக் கணிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(ஊ). மேலே குறிப்பிட்ட சகல விடயங்களையும் காட்டும் வரைபடமொன்றை வரைக.

(05 புள்ளிகள்)

(4). பின்வரும் சமன்பாடுகள் கருதுகோள் ரீதியான திறந்த பொருளாதாரமொன்றை விபரிக்கின்றன. (C, I, G, T, TR மற்றும் NX என்பன மில்லியன் ரூபாவில் அளவிடப்பட்டுள்ளன.

C=200 + 0.8Y G = 600 T = 10+0.1Y
I = 350 TR = 160 NX = 25

(அ). சமநிலைத் தேசிய வருமான மட்டத்தினை மதிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(ஆ). அரசாங்க செலவீடு 50 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கப்படுமாயின் புதிய சமநிலை வருமான மட்டத்தைக் கணிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(இ). அரசாங்கம் வருமான வரிவீதத்தை 10% ஆல் அதிகரிக்கும் கொள்கைத் தீர்மானத்தை எடுக்குமாயின் புதிய சமநிலை வருமான மட்டம் என்னவாக இருக்கும்?

(06 புள்ளிகள்)

(ஈ). புதிய வரிவீதத்தின் கீழ் பெருக்கியின் பெறுமதி யாது?

(03 புள்ளிகள்)

(உ). இப்புதிய செலவீட்டு மற்றும் வரிவீத மாற்றங்கள் யாவற்றையும் கருத்திற் கொண்டு அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்ட மிகை அல்லது குறைநிலையின் மட்டத்தைக் கணிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ஊ). அரசாங்கம் அதன் வருடாந்த நலன்புரிச் செலவு மட்டத்தைக் கட்டுப்படுத்தத் தீர்மானிக்கிறது. தேசிய வருமானத்தின் மீது இக்கொள்கையின் விளைவு என்னவாக இருக்கும்? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

(5). பின்வரும் சமன்பாடுகள் கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றை விபரிக்கின்றன (C, I, G, T என்பன மில்லியன் ரூபாவில்அளவிடப்பட்டுள்ளன).

$C = 200 + 0.7Y$
$T = 100$
$t = 0.1$
$I = 700 - 50i$
$G = 500$
$L = 0.4Y - 20i$
$M/P = 900$

(அ). IS மற்றும் LM வளையிகளின் சமன்பாடுகளைப் பெறுக.

(08 புள்ளிகள்)

(ஆ). சமநிலை வருமான மட்டமும் வட்டிவீத மட்டமும் யாவை?

(05 புள்ளிகள்)

(இ). அரசாங்கம் வரிவீதத்தை (t) = 0.2 ஆகவும் பணநிரம்பலை 100 மில்லியன் ஆகவும் அதிகரிக்கத் தீர்மானிக்குமாயின் புதிய சமநிலை வருமான மட்டமும் வட்டிவீத மட்டமும் யாவை?

(07 புள்ளிகள்)

(ஈ). 'MPC' யும் 't' யும் IS வளையியை எவ்வாறு பாதிக்கும் என்பதை விபரிக்குக.

(05 புள்ளிகள்)

(6). (அ). பூரண மூலதன அசைவுள்ள நிலையில் நெகிழும் நாணயமாற்று வீத முறைமையின் கீழ் விரிவாக்க இறைக்கொள்கையானது வருமானம் மற்றும் வட்டிவீதம் என்பவற்றின் மீது ஏற்படுத்தும் தாக்கவிளைவு யாது? ஒரு வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ). மூலதனம் பூரண அசைவுள்ள நிலையில் நெகிழும் நாணயமாற்று வீத முறைமையில் பின்வரும் கொள்கை மாற்றங்கள் தேசிய வருமானத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினை வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குக.

(i) நலன்புரிச் செலவினங்களில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி
(ii) காசொதுக்கு வீதத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி (10 புள்ளிகள்)

(7). (அ). "பணவீக்கமானது எங்கேயும் எப்போதும் ஒரு பணம்சார்ந்த விடயமாகும்". இக்கூற்றை நீர் ஏற்றுக்கொள்வீரா? உமது விடையை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ). பணவீக்கம் பற்றிய பழம்பொருளியல் கருத்தையும் கெயின்ஸியக் கருத்தையும் வேறுபடுத்துக.

(09 புள்ளிகள்)

(இ). கடந்த தசாப்தத்தில் இலங்கையின் பணவீக்கப் போக்குகளை அவற்றுக்கான காரணங்களைக் கூறிப் பரிசீலிக்குக.

(08 புள்ளிகள்)

(8). பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு **(02)** சிறுகுறிப்புகள் எழுதுக.

(அ). பொருளாதார வளர்ச்சி பற்றிய பழம்பொருளியல் கருத்துக்களும் கெயின்ஸியக் கருத்துக்களும்

(ஆ). இறைக் கொள்கையும் வெளித்தள்ளுகை விளைவும்

(இ). பணத்திற்கான கேள்வியும் திரவப் பொறிநிலையும்

(ஈ). பின்பழம் பொருளியற் கொள்கைகளும் இலங்கைப் பொருளாதாரமும்.

(12.5 புள்ளிகள்)

**********